# துரை தீபம்



மாலைசந்தையான் திருத்தலம்

அமரர் - திருமிகு

# மார்க்கண்டு துரைராசா

அவர்களின்

## நினைவு மலர்

**23.11.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

யாழ். வடமராட்சி

அல்வாய் கிழக்கு, அத்தாயைப் பிறப்பிடமாகக் கொண்டு

சாவகச்சேரி கற்குழியையும் - அத்தாயையும்

வசிப்பிடமாகக் கொண்டு

ஊரும் உறவும் உற்றாரும் மற்றாரும்

உவந்தினிது போற்ற

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டுத்

தேவபதமடைந்த

அமரர் - திருமிகு

# மார்க்கண்டு துரைராசா (துரை)

(அத்தான்-கலங்கி)

அவர்களின் மறைவு குறித்த



# நினைவுமலர்

23-11-2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் ,
அது வேறொருவருடையதாகும்".

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

அன்னையுமாய்த் தந்தையுமாய்
அனைத்து மாகி
ஆன்றபுவித் தெய்வமுமாய்
அருளைப் பேணி
தன்னுடலை மாய்த்தெம்மைத்
தாங்கி நின்று
தனக்கென்று வாழாமல்
எமக்காய் வாழ்ந்த
பொன்மனத்துச் செம்மலே
பூவின் தேனே
உன்பாத மலரடியில்
உவந்து போற்றி
இந்தமலர் காணிக்கை!
ஏற்றுக் கொள்ளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பூமிக்கு மகவாக
30.11.1951

சாமிக்கு மலராக
24.10.2019



அமரர் - திருமிகு

# மார்க்கண்டு துரைராசா (துரை)
## (அத்தான் - கலங்கி)

### திதிநிர்ணயம் - வெண்பா

மண்ணுலகும் போற்ற மகிழ்ந்துலகில் வாழ்ந்ததுரை
விண்ணுலகை நாடி விரைந்ததிதி புண்ணியஞ்சேர்
பேராரும் ஐப்பசியிற் தேய்பிறை ஏகாதசியே
சீரார் திதியென்று தேர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மா – அப்பா

உயிரும் நீரே – உடலும் நீரே உணர்வும் நீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விருட்சமும் விதைகளும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

மூஷிக வாஹன மோத ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

## தேவாரம்

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனிவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்து கொல்களிறு மாகிக்
குரைகடலர் குரை கடற்கோர் கோமானுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனியாகி
நீள் விசும்பாய் நீள் விசுப்பி னுச்சி யாகி
ஏற்றானா யேறூர்ந்த செவ்வ னாகி
யெழுந் சுடராய் எம்மடிகள் நின்றாவாறே

## திருவாசகம்

உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவு மினியமையுவ்
குற்றாலத் தமர்துறையுங் கூத்தாகவும் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விளங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆருமே பெறதாக வறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழறவுழறி
யுமை மணவாளனுக்காட்
பாரும்விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பங்கயக்கண் அருவிநீர் பாய நின்று
பரவும் இசைத் திருப்பதிகம் பாடியாடித்
தங்கு பெருக் கனிகாதல் தகைந்து தட்பத்
தம் பெருமான் கழல் பேற்றுந் தன்மை நீட
அங்கரிகற் புறம் போந்தவ் கயன்மால் போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாந்தந் திருமறைக்கீழ் அணைந்தி றைஞ்சிப்
பொங்கு திருத் தொண்டர்மடங் கட்ட அங்குப்
புக்கருளி இனிதமர்ந்தார் புகலிவேந்தர்

## திருப்புகழ்

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனா
இபமா முகன் தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே

## வாழ்த்து

வையக நீடுக மாமன்பு மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி நாந்தழைத்தோங்குக
தெயற்வ வெண் திருநீறு சிறக்கவே

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வங்களை வேண்டிப் பாடியவை

- ➔ மாலைசந்தைப் பிள்ளையார்
- ➔ சாவகச்சேரி – செருக்கல்பதி பிள்ளையார்
- ➔ சந்நிதி முருகன்
- ➔ வல்லிபுர ஆழ்வார்
- ➔ வேவிலந்தை முத்துமாரி அம்பாள்
- ➔ ஆலடி வயிரவர்
- ➔ தட்டாங்கலட்டி வயிரவர்
- ➔ திமிலிக்கண்டை வயிரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலைசந்தைப் பிள்ளையாரை வேண்டிப் பாடியவை



உச்சாரக் கோபுரத்தை ஒருமுறையும் தரிசித்தால்
ஓடி மாயும்
பொய்த்துயரம் பிணியிவையென் றுன்னைவலம் வருகின்ற
பக்தர் கூட்டம்
உச்சிகுளிர்ந் துனைப்போற்ற ஓடியருள் புரிபவனே
மாலி சந்தி
மெய்ப்பதியின் நாயகனே துரைராசன் உனைச்சேர்ந்தான்
மேன்மை செய்யே!

## சாவகச்சேரி - செருக்கல்பதி பிள்ளையாரை வேண்டிப் பாடியவை



உருக்கமுடன் உன்முற்றம் வந்துதொழும் அடியாரை
உவந்து காக்க
செருக்கல்பதி வந்தமர்ந்து தேவையெலாம் தீர்த்தருளும்
பிள்ளை யாரே
இரக்கமுடன் எவ்வெவர்க்கும் இன்னருளைச் சொரிபவனே
உனது பிள்ளை
துரைக்குமருட் கடைக்கண்ணை காட்டியருட் பதமணையத்
துணைசெய் வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதி முருகனை வேண்டிப் பாடியவை



எந்நிதியும் வேண்டாது சந்நிதியான் அருள்நிதியே
வேண்டி வந்து
நின்னரிய முற்றமதில் நின்றுதொழு வார்தமக்கு
நிறைவே செய்வாய்
உன்னினிய பதநீழல் உவந்தேற்றுத் துரைராசன்
ஓடி வந்தான்
அன்னமளித் தாதரிக்கும் அருட்கடலே முருகோனே
அணைத்துக் கொள்ளே!

## வல்லிபுர ஆழ்வாரை வேண்டிப் பாடியவை



இரைகின்ற கடலோரம் இறையாட்சி புரிகின்ற
இறையே வல்லி
புரமமர்ந்த மாதவனே மாயவனே எனவேண்டிப்
புலம்பு வார்க்கு
வரமருளக் காத்திருக்கும் வள்ளலுனைத் தினம்வேண்டி
வலமும் வந்த
துரைக்குனது அருட்கடைக்கண் காட்டுதியென் றுனைவேண்டித்
துதிக்கின் றோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேவிலந்தை முத்துமாரி அம்பாளை வேண்டிப் பாடியவை



முருகுதவழ் வேவிலந்தை முத்தம்மா மாரியம்மா
முற்றம் வந்து
உருகியழு வார்தமக்கு ஓடோடி வந்தருளை
உவக்கும் தாயே
கருகிவினை மாளஅருட் கண்ணருளும் ஒருதெய்வம்
நீயே என்று
கருதியுனை வந்தணைவான் கலங்கிதுரை ராசனுக்குன்
கருணை தாவே!

## ஆலடி வயிரவரை வேண்டிப் பாடியவை



காலடியில் வந்துனது கருணையினை வேண்டியழக்
காவல் செய்தே
ஆலடியில் வந்திருந்து அருளாட்சி புரியவென
அமர்ந்த கோவே
நாளுமுனைக் கைதொழுது நலம்வேண்டும் துரையுன்னை
நாடி வந்தான்
சூலமது கரங்கொண்ட வயிரவனுன் பதநீழற்
சுகங்கள் தாவே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தட்டாங்கலட்டி வயிரவரை வேண்டிப் பாடியவை



எட்டாத அருட்சுகங்கள் எட்டிவிடும் நின்பதியை
எட்டிப் பார்த்தால்
தட்டாங் கலட்டியிலே குடிகொண்ட வயிரவனே
தலமும் வந்தால்
கிட்டாதோ பதநீழல் என்றுவிரைந் தோடிவரும்
துரைய னுக்கு
இட்டமுடன் இறைசுகங்கள் எல்லாமும் தந்தவனை
ஏற்றுக் கொள்ளே!

## திமிலிக்கண்டை வயிரவரை வேண்டிப் பாடியவை



நறைசொரியும் பொழில்சூழ்ந்த நற்பதியாம் அருள்மணக்கும்
திமிலிக் கண்டை
இறையவனே வயிரவனே உனையிறைஞ்சித் தொழுதழுவான்
துரைய னும்உன்
விரைகழலே சரணென்று வியனுலகை விட்டொதுங்கி
வரைந்து வந்தான்
கருணைமிகும் கடைக்கண்ணைக் காட்டியருட் கரந்தந்து
காத்துக் கொள்ளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# மார்க்கண்டு துரைராசா

அவர்களின்

மறைவு குறித்த

# கையறுநிலைப் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமை மனைவி: சரோஜினிதேவி (சரோ)

கைப்பிடித்த நாள்முதலாய்க் காத லோடும்
கனிவான வாழ்வியற்றி வாழ்ந்தோம் அன்பால்
மெய்த்ததுஇப் பூவுலக வாழ்க்கை என்று
மேதினியோர் பார்த்திருக்க வாழ்ந்தின் புற்றோம்!
இப்புவியில் ஆரெவரும் பெற்றி ராத
அருமந்த வாழ்வெனக்குத் தந்த ராசா
எப்படித்தான் எனைப்பிரிய எண்ணி னாயோ
என்வாழ்வே இடிவிழுந்து எரிந்து போச்சே!

நாம்விதைத்த விதைநான்கும் முளைத்து நாளை
நல்விருட்ச மாய்த்தழைத்து நிழல் பரப்ப
நாமதனிற் குளிர்காய்ந்து மகிழ முன்னம்
நாயகனே எனைத்தனியே விட்டுச் சென்றாய்!
ஊமையென வாய்குளற உறுகண் நீராய்
உருகிவழிந் தோடுகிற மக்களைப் பார்
தீமையெது யாமிழைத்தோம் திக்கு மற்றோம்
திசையறியாப் படகாகித் தவிக்கின் றோமே!

## அன்புமிகும் மூத்தமகள் துர்க்கா (லண்டன்)

எமைப்பெற்ற தந்தையைப்போல் எவர்க்கு வாய்த்தார்?
எமக்கென்றே தானுருகி எல்லாம் செய்தார்!
சுமக்கின்ற சுமைமுழுதும் தான்சு மந்து
சுவைக்கின்ற வாழ்வெமக்குத் தந்தே சென்றார்
இமைக்கின்ற சிறுபொழுதும் எமக்காய் வாழ்ந்தார்
எமதுகடன் தீர்க்கமுனம் எங்கே சென்றார்?
அமைந்தவிதி எண்ணுகிறேன் இறுதி மட்டும்
அருகிருந்து பணிசெய்யாப் பாவி யானேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமகள் துஷ்யா (லண்டன்)

தந்தைமகற் காற்றுகடன் எல்லாம் செய்தாய்
தலைநிமிர்ந்து நாம்வாழ வழிவ குத்தாய்
எந்தவித மானகுறை எதுவு மின்றி
ஏற்றமிகு அன்புதனைச் சொரிந்து காத்தாய்!
வந்தவிதி இடைநடுவே வாவென் றுன்னை
வரவழைத்துக் கொண்டதொரு கொடுமை யாமே!
நொந்தழுவ தன்றியினி நானென் செய்வேன்
நுவலரிய சோகத்தில் நுடங்கி னேனே!

## அருமைமிகு மூத்தமகன் துஷ்யந்தன் (லண்டன்)

மூத்தமக னாயென்னைப் பெற்றெ டுத்து
முன்னறிந்த தெய்வமென முழுதும் தந்தாய்!
வாய்த்தவிதி எமைப்பிரித்து வைத்து ஒன்றாய்
வாழமுடி யாதபடி கொடுமை செய்யும்!
மூத்தவனென் கடன்கழிக்க முடிய வில்லை!
முதுமையிலும் உனைத்தாங்கக் கொடுக்க வில்லை!
ஆர்த்தெழுந்த துயர்க்கடலில் அமிழ்ந்து போனேன்
அப்பாவுன் இன்முகத்தை எப்போ காண்பேன்!

## பாசமிகு இளைய மகன் சசிகரன் (லண்டன்)

புதுமையிலும் புதுமையென வாழ்ந்த அப்பா
புத்திரரைப் பத்திரமாய் காத்த அப்பா
விதவிதமாய் அன்புதனைக் காட்டி எம்மை
விண்ணளவு உயரத்தே வைத்த அப்பா
எதுகுறையும் வைக்காது எங்கள் வாழ்வை
ஏற்றமுறச் செய்துவிட்டு எங்கே சென்றாய்?
முதுமையிலே உனைத்தாங்கக் கொடுக்க வில்லை
முடிந்ததுஉன் கடனென்றா முந்திக் கொண்டாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாசமிகு மருமக்கள்:**
**பாலமுரளி (கண்ணன்), தயாபரன் (தயா), நிஷா (லண்டன்)**

வாயார மாமாவென் றழைக்க வந்த
மாமனென நாம்கருதி வாழா வண்ணம்
தாயாகத் தந்தையெனப் பரிவு காட்டித்
தக்கபடி வாழ்ந்ததொரு தலைவன் நீங்கள்!
நோயாகி முதுமையிலே நுடங்கும் வேளை
நும்மருகே நாமிருக்க விதியில் இல்லை
ஓயாத துயர்த்தீயில் உழல வைத்து
ஓடிஒளிந் திட்டகதை சோக மாமே!

**பேர்விளங்கவந்த பேரப்பிள்ளைகள்:**
**மது, தஷ்வின், அனிஷ், வர்ஷா (லண்டன்)**

தாத்தாவின் மடிதவழ்ந்து வாழ வில்லை!
தருமன்பில் நாம்மகிழ்ந்து திளைக்க வில்லை!
காத்தெம்மை அணைத்தெடுத்துக் கெஞ்சிக் கொஞ்சிக்
கதையேதும் கேட்பதற்கும் கொடுக்க வில்லை!
கூத்தாடிக் குழப்படிகள் செய்ய வில்லை!
குலம்தழைக்க வந்தவரைக் கூட வில்லை!
காத்திருந்து கொடுங்காலன் களவு செய்தான்!
காணமுடி யாதபடி காவு கொண்டான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பிற்கினிய உடன்பிறந்த சகோதரர்கள்: இரத்தினம், பரிபூரணம் (குஞ்சு), சிவராசா (லண்டன்), சாந்தாதேவி (சாந்தா), மகாலிங்கம் (மகாலி)**

பதினொருவர் சோதரங்க ளானோம் இன்று
எழுவரென எண்குறைய இடிந்து போனோம்!
எதிலுமுனக் கிணையாக எவரு மில்லை!
எம்குடும்பப் பேர்விளங்க எழுச்சி கண்டாய்!
விதிவலிது எனக்கொடிய காலன் உன்னை
வில்லங்க மாயிழுத்துப் பறித்துச் சென்றான்!
எதுஇருந்த போதிலும்எம் துரையன் இல்லா
வாழ்வென்ன வாழ்வென்று வாழு கின்றோம்!

**அன்பிற்கினிய உடன்பிறவா சகோதரர்கள்: கௌரிதேவி, சிவம்**

உடன்பிறந்த சோதரரின் மேலாய் எம்மை
உயர்அன்பால் பேணியவன் துரையன் என்போம்!
நடுநிலையாய் எல்லோர்க்கும் நீதி சொல்வான்
நண்பர்களைப் போலன்பை நாடிச் செய்வான்!
அடகொடிய காலனிடை எங்கே வந்தான்
அலாக்காகத் தூக்கியுனை எங்கே வைத்தான்?
திடமிகுந்த எம்குடும்பத் தீபம் காற்றில்
தீய்ந்தணைந்து போனதுயர் துடைக்கப்ப போமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாசமிகு மைத்துனர்கள்:**
**தில்லையம்பலம், தேவசகாயம், தேவபாலன், தேவகுமார்**
**பாசமிகு மைத்துனி:**
**சாந்தினி**

மெத்தவுமே அன்பாலே மேன்மை செய்வாய்!
மென்மைமிகு உள்ளத்தால் கவர்ந்தி ழுப்பாய்!
மைத்துனனாய் எமக்கெல்லாம் வாய்த்த தாலே
மேன்மைபெற வைத்தவன்எம் துரையன் தானே!
உத்தமனே உன்னோடு வாழத் தானே
உலகத்தில் நாம்கொடுத்து வைக்க வில்லை!
பித்தனெனக் கொடுங்காலன் இடையில் வந்து
பிரித்ததுவோ கொடுமையிலும் கொடுமை யம்மா!

**அன்பின் பெறாமக்கள்:**
**சஜீவன், டிசாந்த், நவீனன், கௌரிதேவி, கோகுலகண்ணன், சுஜாதா, இராசன், தேவன், காந்தன், கோகுலன், பவானி, ஸ்ரீ, ராதிகா, உமா, அனிதா, ஆஷா, மது, திவாகர், திசோ, வனிதா, மதி, செல்வம், சாமி, கோகிலன், அருந்தா**

பெற்றெடுத்த தந்தையிலும் அன்பை யூட்டிப்
பெறாமக்கள் எம்மீது பாசம் கொள்வாய்!
அற்புதமாய் எமக்கெல்லாம் அறிவு சொல்வாய்!
அருங்குணத்தால் எமையெல்லாம் அடிமை கொள்வாய்!
கற்பனைக்கும் எட்டாத வகையில் உன்னைக்
காலனவன் கவர்ந்திழுத்துக் கடுகி விட்டான்!
சொற்களினால் எழுதமுடி யாத சோகம்
சொல்லியழு வோம்வேறு என்ன செய்வோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பின் மருமக்கள்:**

**சுபாஷினி, மலர், சிவரஞ்சினி (குட்டி), அப்பன், குகன், ஜெனா, நதியா, அருள், தயா, கசிதா, கஜன், கிருஷ்ணா, மதுமிதன், மதுராங்கி, கமலினி, மாலினி, கண்ணன், ஜெயந்தி, ராஜி, சக்தி, நிஷா, துஷ்யந்தன், துவாரகா, தம்பி**

மாமாவென் றழைப்பதற்கு மாமா இல்லை
மருமக்கள் எமைவிட்டு மாய மானார்!
தேமாவின் சுவையென்னத் தேர்ந்த ணைத்துத்
திகட்டாத அன்பினிலே திளைக்கச் செய்வார்!
மாமாவை எமைவிட்டுப் பிரித்தெ டுக்க
மாயவிதி செய்தவிளை யாட்டு என்ன?
பூமாதும் பொறுக்கமுடி யாத சோகம்!
பூமியிடை நடைப்பிணமாய்ப் புலம்பு கின்றோம்!

**ஊரும் - உறவும், உற்றாரும் - மற்றாரும்:**

வாசலிலே வந்தாரை வரவு சொல்லி
வலிந்துறவு கொண்டாடி வாழ்த்து ரைப்பாய்!
ஆசைமிகக் கொண்டுறவை ஆதரி ப்பாய்
அவர்துயரிற் பங்கேற்று அனுச ரிப்பாய்!
நேசமிகப் பகையொதுக்கி நேர்மை செய்வாய்!
நிறைகுடமாய் வாழ்ந்தெவர்க்கும் நியாயம் சொல்வாய்!
வாசமிகு மலர்த்தோட்ட மானாய் இன்று
வாழ்விடையே விட்டெங்கே விரைந்து விட்டாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

பூத்தமலர் சருகாகிப்
போவ துண்டு
புதுவானின் ஒளியிருளைக்
காண்ப துண்டு
ஆர்த்தெழுந்த கடலாவி
யாவ துண்டு
அழுவாரும் நீறாக
அழுவா ருண்டு
சீர்த்தமகன் துரைராசச்
செம்மல் அந்தச்
சீரிறைவன் பூவடிக்கே
சேர்ந்து போனான்
ஆர்த்தழுவார் மனந்தெளிந்து
ஆறு வீரே
ஆண்டவனார் வகுத்தவிதி
அழுதா மாறும்?

மாயவினை தீர்த்தருள
மாலை சந்தை
மகிழ்பிள்ளைத் திருவடிக்கே
மகிழ்ந்து போனான்!
சேயவனாம் துரைராசன்
செயமே வேண்டிச்
செறிநிழலிற் பூசையிலோர்
மலராய்ச் சேர்ந்தான்!
நேயமிக நின்றொளிர்ந்த
குடும்பத் தீபம்
நிறையொளியிற் சிறுஒளியாய்
நிறைந்து போனான்!
காயுமனக் கவலையொறுத்
தாறு வீரே!
கடவுள்விதி கடந்தவர்யார்
கடப்பார் யாரே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி! மிகநன்றி!

ஆலமரம் போலும் அரிய நிழல்தந்து
வாழும் வரையதனின் விழுதாய் எமைத்தாங்கி
நேற்றுவரை எம்வீட்டு நிலவாய் ஒளிர்ந்துவிட்டுக்
காற்றோடு காற்றாகக் கரைந்துவிட்ட கர்ப்பூரம்!

எம்வீட்டுச் சோலைக்கு எழில்சேர்த்த புத்தரும்பு!
தம்மவருக் கொளியீந்து தான்தேய்ந்த பிறைநிலவு!

குடும்பத்துப் பூமாலை குலைந்துவிட்ட சோகத்தில்
அடங்காத துயர்த்தீயில் அழிந்தெரியும் வேளையிலே-

ஆறுதலைத் தந்து ஆனதுணை யாயிருந்து
கூறுமொழி யாலெங்கள் குற்றுயிரை வருடிவிட்டு
என்னென்ன வழியுளதோ அன்னன்ன வழியிலெலாம்
அன்பார்ந்த ஆதரவை அள்ளிப் பகிர்ந்துதந்து

வலைத்தளங்க ளூடாயும் குறுஞ்செய்தி வழியினிலும்
தொலைபேசிச் செய்தியிலும் தொடர்துயரிற் பங்கேற்று

காடுவரை வந்தெம் கடன்தீர்த்த வேளையிலும்
கூடவிருந் தெங்கள் குறைகளையத் துணைநின்று-
அந்தியேட்டிக் கிரியைக்கும் அழைப்புக்
கிணங்கியிவண் வந்து சிறப்பித்த
அன்புளங்கள் அத்தனைக்கும்-

**நன்றி! - மிகநன்றி!**

இவ்வண்ணம்,
குடும்பத்தினர்.

ஆக்கமும் தொகுப்பும்: அல்வைச் சுந்தரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரது
## வாழ்க்கைச் சரிதம்

ஈழவள நாட்டின் வளமிகு பூமியான வடமராட்சி மண்ணிலே, அத்தாய்ப் பதியிலே மார்க்கண்டு இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளுக்கு நான்காவது புதல்வனாக 30.11.1951 இல் அவதரித்தார். தனது கல்வியைச் செல்லையா பாடசாலையிலே பயின்றவர். இளமைப் பருவத்திலே விவசாயத்தையும், உழவு இயந்திரம் ஓட்டுவதையும் தொழிலாக மேற்கொண்டவர்.

தனது தந்தையரான மார்க்கண்டுவின் நண்பனான கற்குழி சாவகச்சேரியைச் சேர்ந்த அருளம்பலம் - இராசம்மா தம்பதியினரின் மூத்த புத்திரியான சறோஜினிதேவியை 12.11.1977 இல் கரம்பற்றித் தனது இல்லற வாழ்க்கையைத் தென்மராட்சி மண்ணிலே ஆரம்பித்தார். அங்கு எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் வாழ்ந்து, எல்லோராலும் “அத்தான்”. “கலங்கி” என அன்போடு செல்லமாக அழைக்கப்பட்டார். இல்லற வாழ்க்கையின் பயனாக, துர்க்காயினி, துஷ்யந்தினி, துஷ்யந்தன், சசிகரன் ஆகிய நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையாரானார்.

உழவு இயந்திரத்தை வைத்துத் தனது தொழிலை மேற்கொண்டவர், பிற்காலத்தில் வாகனங்களை வாங்கி விற்கும் வர்த்தகத்திலும் ஈடுபட்டார். விளையாட்டுக்களில் ஈடுபாடு கொண்ட இவர், மாலை நேரங்களில் கரப்பந்தாட்டம் விளையாடுவதை வழமையாகக் கொண்டார்.

2000 ஆம் ஆண்டு மே மாதம் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தனது வாழ்விடத்தை விட்டு இடம் பெயர்ந்து, தனது பிறப்பிடமான அத்தாயில் வந்து குடியமர்ந்தார்.

தனது நான்கு பிள்ளைகளையும் லண்டனுக்கு அனுப்பிவைத்தார். மாலைசந்தை விநாயகர்மீது அளவற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும், பக்தியும் கொண்டு, தனது இறுதிக்காலம்வரை மாலை சந்தையானுக்குத் தன்னை அர்ப்பணித்துத் தொண்டாற்றினார்.

தன் பிள்ளைகளோடு தனது மருமகளான தயாவையும், பெறாமக்களான சஜீவன், டிசாந்தன் ஆகியோரையும் வளர்த்தெடுத்து அழகு பார்த்தார்.

எல்லோரிடத்தும் அளவற்ற அன்பும் அக்கறையம் கொண்டவர். தனது பெறாமக்கள், மருமக்கள் ஆகியோருடைய திருமண நிகழ்வுகளையும் முன்னின்று நடத்தினார்.

உதைபந்தாட்டத்திலே அதிக ஈடுபாடுகொண்ட இவர், வதிரி 'டயமன்ஸ்' விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட அணியின் தீவிர ரசிகனாவார். அத்தோடு, 'மைக்கல்' விளையாட்டுக் கழகத்தினது காப்பாளரும் ஆவார்.

தனது பேரப்பிள்ளைகளான மது, தஸ்வின், அனிஸ், வர்சா, அபி, குட்டிஅம்மா ஆகியோர் மீது அளவுகடந்த அன்பு கொண்டவர். தனது இளைய மகனின் திருமணத்தைக்காண ஆவலுடன் இருந்தார், கொடுத்து வைக்கவில்லை.

ஒரு வருடத்திற்கு முன்பு விபத்திற்குள்ளானார். அன்றுமுதல் சிறு சிறு நோய்களுக்காட்பட்டு, யாருமே எதிர்பாராத வகையிலே ஏற்பட்ட காய்ச்சலின் காரணமாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, 24.10.2019 அன்று இரவு 9.10 மணியளவில் மாலைசந்தையானின் பாதாரவிந்தத்தைச் சென்றடைந்தார்.

அன்னார் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் அன்னாரது பெயரும், புகழும், ஆற்றிய சேவையும், கீர்த்தியும் என்றுமே மறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்புள்ள அப்பா.....!

வெள்ளைநிறக் கட்டான உடலமைப்பு, அழகான முகம், தூய்மையான வெண்மை நிற ஆடை, புன்னகைத்த முகம் இவைதான் என் அப்பாவின் அடையாளங்கள்.

அத்தாய் மார்க்கண்டுவின் அழகான புதல்வன், சுற்றியிருப்போரைச் சிரிக்கவைக்கும் கதைகள், நேர்மையான செயல்கள், செய்யநினைத்த காரியத்தைக் கவனம் சிதறாமல் செய்து முடிக்கும் திறமை ஆகிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டவர்.

எங்கள் எல்லோரையும் அன்பாக வளர்த்தவர். எல்லோரும் எப்போதும் நன்றாக இருக்க வேண்டும் என நினைப்பவர். தனது சகோதரர்கள்மீது மிகுந்த பாசம் கொண்டவர். அநியாயத்தைக் கண்டால் அந்த இடத்தில் யாராக இருந்தாலும் தட்டிக்கேட்டு நியாயம் பெறுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவும் அம்மாவும் சேர்ந்து நிகழ்வுகளுக்குச் சென்று வரும் கோலம் என்றுமே எம் மனக்கண்களை விட்டு அகலாது. என் மனங்கவர்ந்தவர்களுக்கு எத்தனையோ நினைவுரைகளை எழுதிய எனக்கு என் அப்பாவிற்கு நினைவுரையை எழுத முடியவில்லை. கைகள் பதறுகின்றன. விழிநீர் சொரிகிறது.

எனது தந்தையார் நோயுற்ற வேளை பெறாமாக்கள், (சஜீவன், டிசாந், நவீனன்) மருமக்கள், அப்பாவின் சகோதர, சகோதரிகள், அம்மாவின் சகோதர, சகோதரி, அப்பாவின் நண்பர்கள் அனைவரும் கண்ணும் கருத்துமாக கவனித்து வந்தார்கள். போக்குவரத்து உதவி செய்தவர்கள் அனைவருக்கும் நன்றி!

அப்பா....!

"இரவல் தந்தவன் கேட்கின்றான் - அதை
இல்லை என்றால் அவன் விடுவானா?
உறவைச் சொல்லி அழுவதனாலே - உயிரை
மீண்டும் தருவானா?"

என்ற கண்ணதாசனின் பாடல் வரிகளுக்கேற்ப, எல்லாமே நடந்து முடிந்து விட்டது.

நாங்கள் எப்போதும் உங்கள் வருகைக்காக ஏங்கி நிற்கிறோம்,

வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறோம்...

பிள்ளைகள் சார்பாக
மூத்தவள் (துர்க்கா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலைசந்தை "மைக்கல் விளையாட்டுக்கழக"த்தின் நினைவுரை

*சமர்ப்பணம் - எமது விளையாட்டுக்கழக முன்னாள் காப்பாளர் அமரர் மார்க்கண்டு துரைராசா அவர்களுக்கு!*

ஈழத்திரு நாட்டில் கல்விக்கு மூளை எனப்போற்றப்படும் கரையோரப் பிரதேசமான வடமராட்சி மண்ணில் இயற்கை அழகு மிகுந்த அல்வாய் கிழக்கு, அத்தாயில் மார்க்கண்டு இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளுக்கு நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். காலஞ்சென்றவர்களான இராசா, வரதராசா, கனகாம்பிகை, மற்றும் இரத்தினம், பரிபூரணம், சாந்தாதேவி, சிவராசா (பிரித்தானியா), கௌரிதேவி, சிவம், மகாலிங்கம், ஆகியோர் இவரின் சகோதரர்கள் ஆவார்கள். சரோஜினி தேவியின் பாசமிகு கணவராவார்.

எமது சமூகத்தின் பல்வேறு பொது சேவைகளில் அமரர் மார்க்கண்டு துரைராசா குடும்பத்தின் பங்கு மிக முக்கியமாக விளங்கி வருகிறது. அதிலும் மாலைசந்தை வரதராஜ விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சியில் இவரின் பங்கு மிக முக்கியமானது. குறிப்பாக அமரர் துரைராசா தனது வாழ்நாளில் அதிககாலம் தனது சமூகத்திற்காகப் பணிசெய்து வந்தமை அனைவரும் அறிந்த விடயமாகும். மாலை நேரங்களில் கிராமப் பெரியவர்களுடன் ஆலயமுன்றலில் இருந்து கதைப்பது எமது கிராமத்திற்கு அழகும், பெருமையும் சேர்ப்பதாகும்.

மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய திருவிழாக்காலங்களில், அதிலும் 6 ஆம் திருவிழா என்றால் 'துரைஅண்ணை'யின் பங்கு தனிச்சிறப்பு மிக்கது. அன்னதானப் பணியிலும் தன்னைத் தன் குடும்பத்தோடு ஈடுபடுத்தியவர்.

சிறுவயது முதல் துடிப்பும், விளையாட்டு மீது அதிக ஆர்வமும் கொண்டவராக இருந்ததினால் அவரது இறுதி நிமிடம்வரை விளையாட்டின்மீது தீவிர ரசிகராக விளங்கிவந்தார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாலைசந்தை மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சியில் அமரர் துரைராசா குடும்பத்திற்கு அதிக பங்கு உள்ளது. ஆரம்ப காலம் முதல் இன்று வரை கழக வளர்ச்சியில் அவர்களின் பங்கு தொடர்ந்த வண்ணமே இருந்தது. எமது கழகத்தின் காப்பாளராகவும் தீவிர நலன் விரும்பியாகவும் இருந்தவர். தற்போதைய கழக மைதானம் எமக்கு கிடைக்க வேண்டும் என்ற திடமான எண்ணத்தோடு வரதராஜ விநாயகர் ஆலய நிர்வாகத்துடனும், கிராமப் பெரியவர்களுடனும் இணைந்து முன்னின்று முக்கிய பங்காற்றிப் பெற்றுத்தந்தவர்.

பிள்ளைகளான துர்க்கா, துஷ்யந்தன் எமது கழகத்தின் மகளிர் அணி உருவாக்கத்திற்கு முக்கிய காரணமாக விளங்கிய முன்னாள் மகளிர் அணி முதல் தலைவியாகிய திருமதி.தயாபரன் துஷ்யந்தி, இளையமகன் கழக முன்னாள் செயலாளர் சசிகரன் புலம்பெயர்ந்து பிரித்தானியா செல்லும்வரை தொடர்ந்து 17 வருடங்கள் கழகத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர். இன்றுவரை கழகத்தின் வளர்ச்சியில் அவரது பங்கு மிக முக்கியமானது.

மூத்தமகள் திருமதி. பாலமுரளி துர்க்கா குடும்பம் போரால் பாதிக்கப்பட்ட நமது உறவுகளுக்கு "மைக்கல் நேசக்கரம்" ஊடாக உதவிகளைச் செய்து வருகின்றார். அமரர் மார்க்கண்டு துரைராசா அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரியும் இறுதிநாள்கூட, அல்வாய் மனோகரா விழையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற உரைபந்தாட்டப் போட்டி ஒன்றில் ரசிகராகப் பங்குபற்றியமை அவர் விளையாட்டின் மீது கொண்ட ஆர்வத்தை வெளிக்காட்டி நிற்கின்றது.

எமது சமூகத்தின் வளர்ச்சியைப் பொறுத்தவரை, அமரர் துரைராசா குடும்பத்தின் பங்கு அவசியமானது. ஆனால் நான்கு பிள்ளைகளும் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழ்ந்து வருகின்றனர். எதிர்காலத்தில் தந்தைவழியில் தமது சமூகத்திற்கும், சமூக அமைப்புக்களின் வளர்ச்சிக்கும் அவர்களின் பங்கு அவசியமாகும். தந்தையின் ஆத்மா சாந்திபெற தொடர்ந்தும் சமூகப்பணிகளைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

மாலைசந்தை - மைக்கல் விளையாட்டுக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மைக்கல் ஐயா'

மைக்கல் விளையாட்டுக் கழகத்தை அடையாளப்படுத்தப் பல சம்பவங்களும் பல சந்தர்ப்பங்களும் இருக்கின்ற வேளை "மைக்கல் ஐயா" என அழைக்கப்படும் அமரர் மார்க்கண்டு துரைராசா ஏன் அப்படி அழைக்கப்பட்டார்.

நூற்றாண்டு கண்ட டயமன்ஸ் விளையாட்டுக் கழத்தின் தீவிர ஆதரவாளர் மைக்கல் ஐயா. மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் ஆட்சிப் பரப்பினுள் வசித்தாலும் எமது கழத்தின் மீது தீவிர ஆதரவும் நம்பிக்கையும் கொண்டவர் ஐயா. டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் போட்டிகளில் இவரது பிரசன்னத்தைக் காணமுடியும். காலநிலை ஒவ்வாத காலங்களிலும் டயமன்ஸ் விளையாட்டுக் கழத்தின் போட்டிகளைக் கண்டுகளிக்க இவர் தவறுவதில்லை.


வெற்றியை மட்டும் வாழ்த்தும் ஒரு ஆதரவாளராக இவர் இருக்கவில்லை. டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் தோல்வியைக் கண்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் போட்டி முடிவடைந்த பின்னர் எமது வீரர்களை அணுகி ஆறுதலும், அறிவுரையும் சொன்ன ஒரு கனவான். எமது வீரர்களின் உற்சாகத்துக்கான உறுதியான பங்களிப்பையும் வழங்கி வந்தவர். எமது கழகத்தைப்பற்றியும் கழக வீரர்கள் பற்றியும் தெளிவான சிந்தனை கொண்டவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

'டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்.'
வதிரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு(அ)
+
மா(ஆ)
பிள்ளை(அ)

வரதராசா(அ) + ஜனகாம்பிகை
வனிதா
மதி

சிவராசா + இராஜேஸ்வரி
திபாகர்
திசோ

மனோகரன் + மகேஸ்வரி
செல்வம்
சாமி
கோகிலன்
அருந்தா
கண்ணன்(அ)

மகாலிங்கம் + அருட்செல்வி
அனிதா
ஆஷா
மது

சாந்தாதேவி + தங்கராசா
ஜெனா
நதியா

கனகாம்பிகை(அ)

அருளம்பலம்
+
இராசம்மா

சாந்தினி + மஸ்வரன்(அ)
சஜீவன்
ஷசாந்த்
நவீனன்

தேவசகாயம் + அம்பிகா
துஷ்யந்தன்
துவாரகா

தேவபாலன்

தேவகுமாரன் + கவிதா
மதுமிதன்
மதுரங்கி

ஷ்யந்தினி + யாபரன்
அனிஷ்
வர்ஷா

துஷ்யந்தன் + நிசாந்தினி

சசிகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) - அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்முகத்தில் இழையோடும்
அன்பும் பண்பும்!
இனிமையுறு சொல்லேநின்
நாவி லூறும்!
விண்ணுயரக் குணம்படைத்த
வேந்த னேநீ
விதைத்ததெலாம் பயிராகி
விளைதல் கண்டாய்!

கண்ணிமையாய்க் காத்துஎமைப்
பேணி நின்ற
கருணையினை நினைக்கையிலே
கண் நீர் ஊற்றும்!
பண்கலந்த பாடலென
மகிழ வைத்தாய்!
பாதியிலேன் இசைமுடித்துப்
பயண மானாய்?

## துரைதீபம்



சக்தி பதிப்பகம், மீசாலை. - 0773160464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org